<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண். 74/2013</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **20.02.2026** |
| **பெயர்** | **ஜெய்சங்கர்** |
| **த/பெ** | **ஏகாம்பரம்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 03.05.p.m**

**<u>1, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில்</u>**
**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. வழக்கு சொத்தின் பழைய சர்வே எண் என்ன என்றால் 85/2. என்படி வழக்கு சொத்து பூர்வீகமாக யாருக்கு சொந்தம் என்றால் என் தந்தையின் தந்தையான வேனுரெட்டியாருக்கு சொந்தமானது. வேனுரெட்டியாருக்கு சொந்தமானது என்பதை காண்பிக்க பத்திரம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. என்படி எஸ.எல்.ஆர் நகல் மட்டும் தான் உள்ளதா என்றால் ஆம். மேற்சொன்ன எஸ்.எல்.ஆர் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் அது எந்த வருடத்திய ஆவணம் என்று ஞாபகம் இல்லை.

2. வேனுரெட்டியாருக்கு 4 பிள்ளைகள் அவர்கள் ரங்கநாதரெட்டியார், பெருமாள்ரெட்டியார், ஏகாம்பரரெட்டியார் மற்றும் கண்ணையாரெட்டியார். அவருக்கு ஒரு மகளும் உண்டு அவர் பெயர் தெரியாது. அவர் இறந்துவிட்டார். வேனுரெட்யடிாரின் இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதானங. வேனுரெட்டியாரின் வாரிசுகளை காண்பிக்ககும் வகையில் எந்த ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்படி

வழக்கு சொத்தின் விஸ்தீர்ணம் என்ன என்றால் 52 செண்ட்.

3. வேனுரெட்டியாருக்கு மொத்தம் எவ்வளவு நிலம் இருந்தது என்றால் சுமார் 15 ஏக்கர். வேனுரெட்டியாரின் நிலங்கள் மற்றும் அதன் சர்வே எண்கள் குறித்து இவ்வழக்கில் நான் கூறவில்லை என்றால் சரிதான். என்படி நான் கூறும் பாகப்பிரிவினை வேனுரெட்டியார் இறந்த பிறகு பிரிந்ததா என்றால் இல்லை அவர் உயிருடன் இருந்தபோதே பிரிந்தது. எந்த வருடம் வேனுரெட்டியார் காலமடைந்தார் என்றால் எனக்கு தெரியாது. வேனுரெட்டியாருக்கு எவ்வளவு பாகம் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. என் தந்தையான ஏகாம்பரரெட்டிக்கு 3 ஏக்கர் 60 செண்ட் பாகம் இருந்தது. வழக்கு சொத்து என் தாத்தாவிற்கு சென்ற பாகமா அல்லது என் தந்தைக்கு சென்ற பாகமா என்றால் என் தந்தைக்கு வந்த பாகம். எந்த வருடம் பாகம் பிரிந்தது என்றால் 1967.

4. வாய்மொழி பாகப்பிரிவினையா அல்லது பத்திரம் மூலம் பிரித்துக் கொண்டார்களா என்றால் கூர்சிட்டின் படி பிரித்துக்கொண்டார்கள். அந்த கூர்ச்சிட்டு என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. என் வழக்குரையில் கூர்சிட்டை குறிப்பிடவில்லை என்றால் தெரியாது. என் பிரமாணவாக்குமூலத்தில் தான் முதன்முதலில் கூர்சிட்டினை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் பிரமாணவாக்குமூலத்தில் அந்த கூர்சிட்டினை குறித்து எந்த தேதியில் நிறைவேற்றபட்டது என்றும் அதற்கான ஆவணத்தை எதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்ற விவரங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் தாத்தாவிற்கு என் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது போல் எந்த வருடம் பட்டா வழங்கினார்கள் என்றால் ஞாபகம் இல்லை.

5. வேனுரெட்டியார் பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யதுள்ளேனா என்றால் இல்லை. வேனுரெட்டியார் தான் என் தாத்தா என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்ல என்றால் சரிதான். மேற்சொன்னது போல் 52 செண்ட் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும் 26 செண்ட் நிலத்திற்கு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 52 செண்டில் 26 செண்ட் எந்த திசையில் அமைந்துள்ளது என்றால் வடக்கு திசையில் அமைந்துள்ளது. வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்று தெரியுமா என்றால் தாவா 26 செண்ட் நிலம் குறித்து 2010 ல் ஏற்பட்ட ஆவணம் வைத்து சொத்து விற்கப்பட்டது அந்த ஆவணங்கள் செல்லாது

என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

6. யார், யாருக்கு செய்து கொடுத்தார்கள் என்றால் 4 முதல் 6 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதி பெயரில் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார்கள். அது என்ன ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. 1–ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு செய்த கிரையமும் செல்லாது என்று தான் கோரியுள்ளேன். 3 முதல் 5 பிரதிவாதிகள் 1–ம் பிர்திவாதிக்கு ஆவணம் எழுதிய போது பட்டா ஹரிகிருஷ்ணன் மற்றும் அவர் சகோதரர் இராஜகோபால் மீதும் இருந்ததா என்றால் இல்லை. ஹரிகிருஷ்ணன் என் ஊர்காரர் என்பதால் அவரை தெரியும். அவரின் சகோதரரான இராஜகோபால் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். முதலில் வழக்கை 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது தான் தாக்கல் செய்துள்ளேன். குறிப்பாக 3 முதல் 5 பிரதிவாதிகளை முதலில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

7. பிறகு இந்த வழக்கை தாக்கல் செய்து 4 ஆண்டுகள் கழித்து தான் அவர்களை தரப்பினர்களாக சேர்த்தோம் என்றால் சரிதான். என்படி 1ம் பிரதிவாதி ஏற்படுத்திக் கொண்ட ஆவணத்தின் முன்னிலையில் தாவா சொத்து 26 செண்டை உட்பிரிவு செய்து கொண்டு பட்டா மாற்றி கொண்டார் என்றும் அது செல்லாது என்றும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்படி இந்த வழக்கை தாக்கல் செய்தபோது பிரதிவாதிகள் வாதிகளின் உரிமையை மறுக்கும் வகையில் பொய்யான ஆவணங்களை ஏற்படுத்தி கொண்டாதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

8. அப்படி இருக்கையில் வாதிகளின் உரிமையை கோரும் வகையில் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல, கோரியுள்ளேன். இராஜகோபாலிடம் எனக்கு பேச்சுவார்த்தை உண்டா என்றால் உண்டு. அவரிடம் இந்த வழக்கு பற்றி நான் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். அவர் எதுவும் இந்த வழக்கு குறித்த தகவல் அளித்தாரா என்றால் அவர் தாவா சொத்த எங்கள் சொத்து தான் வழக்கிற்கான சாட்சியம் அளிக்க வருவதாக கூறினார். வா.சா.ஆ1 ஆவணம் வழக்கிற்கு முன்பாக வாங்கிய ஆவணம் என்றால் சரிதான்.

9. இந்த வழக்கை முதன்முதலாக தாக்கல் செய்த போது 26 செண்டின் நான்கு எல்லைகள் குறிப்பிட்டுள்ளோம் அதில் தெற்கு பக்கம் ஹரிகிருஷ்ணன் வகையறாவிற்கு சொந்தம் என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 52 செண்டில் வடக்கு பக்கம் 26

செண்ட் பாலாஜி பெயருக்கு பத்திரம் செய்து கொடுக்கப்பட்டது மீதமுள்ள தெற்கு பக்கத்தில் 26 செண்டிற்கு ஹரிகிருஷ்ணன் மற்றும் இராஜகோபால் பெயருக்கு பட்டா வழங்கக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பிராதில் எல்லை காண்பித்துள்ளது.

10. பின்பு ஆர.டி.ஓவின் உத்தரவின்படி 52 செண்ட் நிலத்திற்கும் என் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. ஆர.டி.ஓவின் உத்தரவு வழக்கிற்கு முன்பா அல்லது பின்பா என்றால் வழக்கிற்கு பின்பு. – வா.சா.ஆ 16 ஆர்.டி.ஓ உத்தரவு 12.11.2013–ல் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். 21.03.2013 இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அதன்பிறகு வாதிகள் அனைவரும் சேர்ந்து 11.04.2013–ல் தான் ஆர்.டி.ஓவிடம் மனு கொடுத்தோம் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆர்.டி.ஒ உத்தரவில் வடக்கு பக்கம் 26 செண்ட் 1ம் பிரதிவாதியான பாலாஜியின் பெயரிலும் தெற்கு பக்கம் உள்ள 26 செண்ட் ஹரிகிருஷ்ணன் மற்றும் இராஜகோபால் பெயரில் தான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தந்தை எந்த வருடம் காலமானார் என்றால் 1980. வா.சா.ஆ 15 எந்த வருடம் வழங்கப்பட்டது என்றால் 1986.

11. வா.சா.ஆ 15 ஆவணத்தை வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் வழக்கை தாக்கல் செய்த போது வா.சா.ஆ 15 ஆவணததை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 15 போலியானது என்றும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையான பட்டா என்றால் வழக்கில் கூறியிருப்போம் என்றும் பொய்யான ஆவணம் என்பதால் தான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருந்ததாக ஆர்.டி.ஒ உத்தரவில் குறிப்பிட்டுள்ளபோது வழக்கின் முடிவை வைத்து தான் உத்தரவு பிறப்பித்து இருக்க வேண்டும் என்றும் தவறாக அவ்வாறு உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரியல்ல.

12. வா.சா.ஆ 16 ஆவணத்தில் வேனுரெட்டியாருக்கு எத்தனை பிள்ளைகள் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 16 செல்லாது என்றும் அதனை நீதிமன்றம் கருத்தில் எடுத்துக் கொள்ள கூடாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 4 முதல் 8 வரையிலான ஆவணங்கள் கிஸ்து ரசீதுகள் இந்த வழக்கிற்கு பிறகு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ–13 வழக்கறிஞர் அறிவிப்பில் கூட என் தாத்தாவின்

இறப்பிற்கு பிறகு என் தந்தைக்கு சொத்து கிடைக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் அதிலும் கூட குறிப்பிட்டு என் தந்தைக்கு எந்த வகையில் கிடைக்கப்பெற்றது என்று என் தாத்தாவின் வாரிசுகள் குறித்து குறிப்பிடவில்லை என்றால் தெரியாது.

13. பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையின் விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். 52 செண்ட் நிலமும் வேனுரெட்டியாருக்கு சொந்தமானது தான் ஆனால் அந்த வேனுரெட்டி என் தாத்தா இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பாலாஜியின் தாத்தா முனுசாமிரெட்டி மற்றொரு நிலத்தை வாய்மொழியாக பரிவர்த்தனை செய்துவிட்டு அனுபவித்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. முனுசாமிரெட்டியார் தான் இந்த சொத்தினை அனுபவித்து வந்தார் அவர் இறந்த பிறகு அவருடைய பிள்ளைகளான ஹரிகிருஷ்ணன் மற்றும் இராஜகோபால் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

14. தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. வேனுரெட்டியார் பெயரில் உள்ள பட்டாவை மட்டும் வைத்து கொண்டு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல. பழைய பட்டா 704 ஹரிகிருஷ்ணன் மற்றும் இராஜகோபால் பெயரில் தான் இருந்தது என்றால் சரியல்ல. அவர்கள் இருவருக்கும் இடைடேய நடந்த வாய்மொழி பாகப்பிரிவினை வடக்கு பக்கம் 26 செண்ட் ஹரிகிருஷ்ணன் பாகத்திற்கும் தெற்கே 26 செண்ட் இராஜகோபால் பாகத்திற்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரியல்ல. பூர்வீக சொத்து என்பதால் அந்த வடக்கே 26 செண்ட் நிலத்தை 4 முதல் 6 பிரதிவாதிகள் அவர்களுடைய பாகத்தை 1ம் பிரதிவாதிக்கு விடுதலை செய்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

15. அதன் அடிப்படையில் தான் 1ம் பிரதிவாதி முழு உரிமையாளர் ஆகி 2 மற்றும் 3 ம் பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்தார்கள் என்றால் சரியல்ல. 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு மேற்சொன்ன விற்பனைக்கு பிறகு அவர்களின் பெயருக்கு பட்டா எண் 3823 என்று பட்டா வாங்கி கொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். வேனுரெட்டியார் தான் என் தாத்தா என்று நிரூபணம் செய்தால் கூட வழக்கு சொத்தின் அனுபவம் பல ஆண்டுகளாக முனுசாமி ரெட்டிக்கும் அவருக்கு பிறகு ஹரிகிருஷ்ணன் மற்றும் இராஜகோபால் ரெட்டி ஆகியோரின் அனுபவத்தில் தான் இருந்தது என்றும் தாவா சொத்து பொருத்த வரையில் 1ம் பிரதிவாதி அனுபவத்திலும்

2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் அனுபவத்தில் வாதிகளாகிய எங்களின் உரிமைக்கு விரோதமாக அமைதியாக தொடர்ந்து வெளிப்படையாக இருந்து வருகிறது என்றும் அதனால் அவர்களுக்கு வழக்கு சொத்தில் எதிரிடை ஸ்வாதீன உரிமை ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

16. எனவே இவ்வழக்கில் எந்த உரிமையும் இல்லை என்றும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 9ல் குறிப்பிட்டள்ள எந்த பட்டா எண் தாவா சொத்திற்கு சொந்தமானது என்றால் 731. அதன் பட்டாதாரர் பெயர் சங்கர் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். நான் தான் சங்கர் என்கிற ஜெயசங்கர். வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு எங்களுக்குள் ஏதேனும் பத்திரம் ஏற்படுத்திக் கொண்டோமா என்றால் ஏற்படுத்திகொண்டோம். என்ன பத்திரம் என்றால் பாகப்பிரிவினை பத்திரம். வழக்கு சொத்து யார் பாகத்திற்கு வந்தது என்றால் என் பாகத்திற்கு வந்தது அது பதிவு செய்யப்பட்ட பத்திரமா என்றால் ஆம். 25.07.2022 ல் அந்த பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

17. ஆனால் அந்த பத்திரம் குறித்து என் பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதனால் குறிப்பிடவில்லை என்றால் சொல்ல அவசியமில்லலை என்பதால் குறிப்பிடவில்லை. வழக்கு சொத்திற்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் மேற்சொன்ன பாகப்பிரிவினை பத்திரம் வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. இராஜகோபால் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. அவர் குடும்பத்திற்கும் ஹரிகிருஷ்ணன் குடும்பத்திற்கும் விரோதமா என்றால் தெரியாது.

**விசாரணை முடியும் நேரம்.04.02.p.m.**